## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| HMOP.No. 50/2025 | Date : 05.03.2026 | PW 1 |
| --- | --- | --- |
| Name: மோகன சுந்தராம்பாள் | த/பெ. முருகேசன் | |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர் எனது கணவர் என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 07.09.2022 ந் தேதி திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமண பந்தத்தின் வாயிலாக எங்களுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது எனது பெற்றோர் செய்த நகை மற்றும் நகை மற்றும் அனைத்து சீர் பொருட்களையும் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடமிருந்து எந்த பொருளும் வாங்கவேண்டியதில்லை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ வாய்ப்பு கிடையாது. மனுதாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு இருவருக்கும் இடையே பேசப்பட்ட பைசலின் பேரில் கூட்டுக்குறிப்பாணை ஒன்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் மனுவில் எதிர்மனுதாரர் மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தாத பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்க ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். எதிர்காலத்தில் எதிர்மனுதாரரிடம் இருந்து ஜீவனாம்சம் எதுவும் கோரமாட்டேன் என்றால் சரிதான்.

ஒம்/–மோகன சுந்தராம்பாள்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
HMOP 50/2025

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 05.03.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | புவனேஷ் | **Caste** | : | |
| **S/o.** | : | சித்தன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

<u>முதல் விசாரணை :-</u>

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ. ம.சா.ஆ.1 | – | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை(அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது) | நகல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

## குறுக்கு விசாரணை

மனுதாரர் எனது மனைவி என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் 07.09.2022 ந் தேதி திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமண பந்தத்தின் வாயிலாக எங்களுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது மனுதாரருக்கு அளித்த நகை மற்றும் அனைத்து சீர் பொருட்களையும் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மனுதாரரிடமிருந்து எந்த பொருளும் வாங்கவேண்டியதில்லை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ வாய்ப்பு கிடையாது. மனுதாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு இருவருக்கும் இடையே பேசப்பட்ட

பைசலின் பேரில் கூட்டுக்குறிப்பாணை ஒன்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் மனுவில் மனுதாரர் மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தாத பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்க ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

ஒம்/–புவனேஷ்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.